<u>23.06.2026</u>

<u>அசல் வழக்கு எண். 129/2020</u>

<u>வா.சா. 1 –</u> திரு. சுடலையாண்டி

<u>சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>

<u>1 முதல் 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

1. உங்களுக்கு எழதப்படிக்க தெரியுமா என்றால் தமிழில் படிக்க தெரியும். வாசாஆ 2 ஆவணத்தில் உள்ள கையொழத்து உங்களது என்றால் ஆமாம். உங்களது உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் ஒருவர். 2006 ல் உங்களது தகப்பனார் உங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவா சொத்தும மற்ற சொத்துககள் சம்மதமாக எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த மற்ற சொத்துக்கள் உங்கள் வசம் இல்லை என்றால் சரியல்ல.

2. வழக்கு சொத்தை கிரையம் கொடுக்கும் போதே மற்ற சொத்தையும் கிரையம் கொடுத்தீர்கன் என்றால் சரியல்ல. நீங்கள் பத்திர ஆபி்ஸக்கு அடிக்கடி செல்லும் வழக்கம் உடையவர் என்றால் சரியல்ல. வாசாஆ 2 எழுதும் போது சார்பதிவாளர் உங்கள் பெயரை வெளியில் இருந்து கூப்பிட்டார்கள் என்றால் இல்லை. நீங்கள் சப்ரிசிஸ்டர் ஆபிசுக்குள் சென்றீர்கள் என்றும் நீங்கள் பணம் பெற்றதை சார்பதிவாளர் உறுதி செய்த பின்புதான் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. 05.01.2011 தேதியில் வாசாஆ 2 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் இருந்து 1ம் பிரதிவாதி தான் கிரையம் கொடுக்கும் காலம் வரை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் 3ம் பிரதிவாதிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

4. வாசாஆ 5 க்கும் வழகக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 2 போலியாக ஏற்படுத்தப்பட்டது என்று நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண்18/2013 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.06.23 17:39:56 +0530

எந்த தேதியில் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் தேதி நியாபகம் இல்லை. எந்த வருடம் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் 2012ல் கொடுத்தேன். அந்த புகாரை பணப்பற்று ரசீதின் அடிப்படையில் தான் கொடுத்தீர்களா என்றால் சரிதான். அந்த ரசீது தடவியல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது என்றால சரிதான். ரசீதில் உள்ள கையொழுத்து 3ம் பிரதிவாதியின் கையெழ்துது இல்லை எனஉறுதி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே கையொப்பம் இல்லை என்பதால் வழககை தள்ளுபடி செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல.

5. சுசிலான் நிறுவனம் ராதாபுரம் பகுதியில் இடம் வாங்கி காற்றாலைகளை நிறுவிகிறார் என்றால் சாட்சி நேரடியாக பதில் அளிக்கவில்லை.

6. நீங்கள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என் சொத்து எனக்கு வேண்டும் என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 2 பற்றி 2012ம் வருடமே தெரிந்து 3 வருடங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. முதல் பரிகாரம் சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளதால் மற்ற பரிகாரங்களும் கிடைக்ககூடியது இல்லை என்றும் விளம்புகை பரிகாரம் கேட்க்காமால் ஆவணங்களை மட்டும் செல்லாது என கோரிக்கை வைப்பது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

7. தபசில் சொத்தை 1ம் பிரதிவாதியிடம் இருந்து 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றும் அதன் பின்பு 2ம் பிரதிவாதியிடம் இருந்து 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றும் தற்போது 4ம் பிரதிவாதி தாவா சொத்தைஅனுபவம் செய்து வருகிறார் என்றலல் சரியல்ல. வாசாஆ 2 காலத்திற்கு பிறகு தாவா சொத்தைநீங்கள் அனுபவம் செய்யவில்லை என்றும் உங்களுக்கு உறுத்துக்கட்டளை பரிகாலம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

8. வாசாஆ 2க்கும் 4க்கும் எந்த விதத்திலும் பொறுத்தமில்லைஎன்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் இருந்து கூடுதல் பணபறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசுதுறைகளில் புகார் அளித்தும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. கிரையம் கொடுத்துவிட்டு வேண்டுமென்றே மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வாசாஆ 4 முதல்

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.06.23 17:40:06 +0530

18 வரை ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாசாஆ 11 ஆவணம் பணம் பறிக்கும் நோககில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.06.23 17:40:13 +0530